மேலும் எவ்வளவு நாட்களில் இப்படிப்பட்ட மையங்களை அணுகி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்களை காக்கின்ற காவல் தெய்வமாக விளங்குகின்ற நம்முடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பகுதியிலுள்ள பிரச்சினை குறித்து, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, இங்குள்ள மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை இது என்பதற்காக பணத்தைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், இதனை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையிலே ஆய்வுகள் முடிந்த பின்பு உடனடியாக பணிகள் மிகக்குறுகிய காலத்திற்குள்ளே துவங்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ஆர். கோடிமாரி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் உறுப்பினர்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1992-93ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது, பதினான்காவது மற்றும் பதினைந்தாவது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 35 பாசனம், பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 160,41,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.